17

உ

சிவமயம்

OFFICE OF THE ... 13 OCT ... MADRAS

ஸ்ரீவில்லிபுத்தூர் மகா-ா-ா-ஸ்ரீ கனம்

சுப்பைய தாசர் அவர்களின்

சிஷியனான

போடிநாயக்கனூர்

சே. கா. சுந்தரமணியதாஸ் இயற்றிய

ஞானரசக்கீர்த்தனை

இஃது

போடிநாயக்கனூர்

வீ. கோ. மல்லையன் செட்டியார்,

அவர்களின் வேண்டுகோளின்படியும்

ஷை யார்

பொருளுதவியினாலும்

போடிநாயக்கனூர்

ஹக்கீம் பிரஸ் என்னும்

அச்சேந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1927.

காப்பி 500

விலை அணா 4.

Q2:417
N27
85914

உ

சிவமயம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் மகா-ள-ள-ஸ்ரீ கனம் சுப்பையா தாசர்

அவர்களின் சிஷ்யனான போடிநாயக்கனூர்

செ. கா. சுந்தரமணியதாஸ் இயற்றிய

ஞானரசக்கீர்த்தனை

இஃது

ஷை போடிநாயக்கனூர் கொ. மல்லையன்செட்டியார்

அவர்களின் வேண்டுகோளின்படியும் ஷையார்

பொருளுதவியினாலும்

போடிநாயக்கனூர்

"ஹக்கீம் பிரஸ்" என்னும்

அச்சாபீஸில் பதிப்பிக்கப்பட்டது

1926

OFFICE OF ... MADRAS 13 OCT 192

உ

சுபம்

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து போடிநாயக்கனூரில்வந்திருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ கன்ம் சுப்பையதாஸரவர்கள்
இயற்றிய சாற்றுக்கவி.

வெண்பா.

விந்தைபெரும் ஞானவடி வேலன் திருவடிக்கும்
நந்தகோ விந்தமிசை நற்பதமும்—சிந்தைமகிழ்
கொண்டுமொழி செந்தமிட்பா கூறினன் சுந்தரம்சொல்
விண்டுமொழி கொண்டிடவே தான்

போடிநாயக்கனூர் கொ. மல்லயன் செட்டியாரவர்கள்
இயற்றிய சாற்றுக்கவி.

ஆசிரிய விருத்தம்.

ஆதியே அரும்பொருள் ஜோதியே ஜோதியின்மயமே
நீதியேநிமலா நின்மலவடிவே நிற்குணநிராமயமே
பாதியே மாரனெரித்த பரமரூபியே
காதியே காலனைக்கடிந்த காரணப் பொருளே
கோதிலாக் குணமே என் குருவே
தீதிலா அந்தாதிசொல் வழுவாதிருக்க வரமருள்வாயே.

போடிநாயக்கனூர்
திருஞானசம்பந்தன்பிள்ளையவர்கள்
சொன்னது

சேவற் கொடியுடையெஞ் சேவகற்குக் கீர்த்தனமாய்
ஆவற் புதமாகப் பாடினன்—யாவனெனில்
சொல்லும் கவிவலவன் சுந்தரமணிதாசனென்பான்
மல்லையனச்சேற்றிமகிழ்ந் தான்

85914

உ

சிவமயம்

ஸ்ரீவில்லிபுத்தூர் மகா-ள-ள-ஸ்ரீ கனம் சுப்பைய தாஸரவர்களின்
சிஷ்யனான போடிநாயக்கனூர் செ. கா. சுந்தரமணியதாஸ்
இயற்றிய,

ஞானரசக் கீர்த்தனை.

விநாயகர் தோத்திரம்.

அனந்தாதி முடிவுமாகி ஆனைமாமுக ஐங்கர வடிவுமாகி
கனதொந்தி சுடராகி காணரும் பெருங்கருணை உருவுமாகி
துணை சிந்தை தெளிவாகி சூரர்குல வல்லபை யிடப்பாகமாகி
மணம்தந்தை தாயாகும் மௌன கணேசனடி காப்பதாமே

விநாயகர் துதி.

தாளம் ஆதி, ராகம் சுத்த பங்காளா,
(தொலினே சேஸின என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

கரிமா முகவனே காவர்சரணம் (க)
கருதிடும் பாமாலை குறைவரா (க)

அனு பல்லவி.

திரிபுவனுதி தெரிசனந்தாரீர் (தி)
திருவணையுந் தமிழ் நிரைவேரப்பாரீர் (க)

சரணம்.

பரிபூரணனே பசுபதி சுதனே (ப)
பரமண்டலத்திலெங்கும் முடிவான பரனே (ப)
அரிமருகனே ஞானதற்பரனே (அ)
ஆகுவாகனமீது நடமிடுங்கரனே (க)

வனசீர் துரையே   வரமருளிரையே (வ)
வல்லபை மகிழுரும் வானே நான்மறையே (வ)
அனத்துயிர்க்குயிரே ஆள் பலமுறையே (அ)
அர்ச்சித்திடும் சுந்தர மிச்சைதீர் நெறியே (க)

ராகம் மத்தியமாவதி   தாளம் ஆதி.

(ஞான ஷண்முக குகனே என்ற வர்ணமெட்டு)

பல்லவி

தாயே மாசரஸ்வதியே   உன்
தாளிணை சதமெனவே தொழுதேன கன (தா)

அநு பல்லவி

நீயே கெதியென்றோதும்
சேயன் செந்தமிழ் மீது
நீதியே நாவிலிருந்துரையே புரி
ஆதியே நாவலரோ தொழும் சுந்தரி (தா)

சரணம்

மாயன் மருமகளே மங்கள கல்யாணி
மாமறை முடிவினிலாடும் கலைவாணி (மா)
மாயைப் பிரபஞ்சமெனும் ஒயாக்கவலையதை (மா)
மாற்றியே சேர்த்தருளுன்பதஞ்சந்ததம்
கூற்றணுகாதருள் போற்றினேன் சுந்தரம். (தா)

ராகம் பூரிகல்யாணி.   தாளம் ரூபகம்.

(பூரணச்சந்த்ரமுகமாது என்ற வர்ணமெட்டு)

பல்லவி

தில்லை நடேச பூபதியே அன்பர் நிதியே (தி)

அனுபல்லவி

சித்தர்கள் முத்தர்கள் பக்தர்களெண்திசை தொழுமலரடியருள் (ஸ்ரீ)
திருநேத்ரதாரி சர்வ பொருளாகிய குருபரசிவ (ஸ்ரீ)
பூரண ஞானபராபர வாரணம் தோலுரித்தணிந்தவா (ஸ்ரீ)
நித்தமும் துதிபுரி சிற[illegible]னை சித்தமும் வைத்தருள் பரமனே (ஸ்ரீ)
செங்கரத்தில் மழுவேந்தி கங்கை சிரமேற்சுமந்த
சங்கரனே உன்னை [illegible] சரணம்
சந்திரசேகர [illegible]
சுந்தர மாகர மகாதேவா. (ஸ்ரீ)

சரணம்

அந்தரி உமை மாதா அம்பிகை பாகனே
சிந்தையின் துயர் தீரும் தீனதயாளனே
சுந்தரம்பாடித் துதிக்கும் மறை நாதனே

மகுடம்

துலங்கிடு மாதிரு கயிலையிலோங்கிடும்
செம்மலே பரவெளி எங்கும் உன்மயப்
பூசுரர் துதி பங்கயதாள் தருபிதுததி (ஸ்ரீ)

4 ராகம் இந்துஸ்தான்தோடி தாளம் ரூபகசாப்பு

(சாமியே கந்த சாமியே என்ற வர்ண மெட்டு)

பல்லவி

மாயனே சர்வ நேயனே மா
மாவடி சிறந்த சேவடியருளே (மா)

அனு பல்லவி.

மங்கள ரெங்கா ஹரிஹரி
இங்கருள் தந்தாள் பரவெளி
எங்குமே தங்கிய முரஹரி (மா)

சரணம்.

சித்தத்தின் குறை தவிரதிபதி
எத்திக்கும் புகழ் மிகும் செகுபதி
கத்தித்திக்குளரியே நின் கெதி
பத்திக்குன் முத்தியே தரும் ஆதி (மா)

இருதயம் நிறை நாஹரி வாதனே
திருமகளுறை குருபாநாதனே
அருமறை தினம் துதிபுரி மூலனே
ஒருடன் மிசை நடமிடும் வேதனே. (மா)

தேரினிலூறிய தற்பரா
நாரணமாதவா் விற்பார்
தாரகனுமா் ஆதிபுரி
தீர வுதாரச் சித்ர (மா)

வந்தூந்தன் செந்தாளடிமலர்
தந்தெந்தன் சிந்தாகுலந்தவிர்
வைகுந்தா னந்தா சுந்தரம்
மைந்தன் தன் வினையே யறுதிரு (மா)

ராகம் ஆனந்த பைரவி. தாளம் ஆதி.
(ஆதாரம் எனக்கார் என்ற வர்ணமெட்டு)
பல்லவி.

பாதாரம் தந்துகார் பாந்தாமா கண்பார்
பவனமிசைவார் ஹரிபகவானே உனதிரு (பா)

அனுபல்லவி.

ஆதாரம் உனையல்லால்
நீதானினை வேறில்லை (பா)

சரணம்

படிக்குள் நிறை ஜெய　　வாதனே முரஹரி
கொடிக்குள் ராவணப்படையது　　குடல் சரிக்
கிடச்சரம்தனை விடுத்　　தெமனுலகுயிர்
கடிக்குள னுப்பிய　　கரியவா ரெகுபதி
கலிக்கவதாரனே　　கமல பொற்பாதனே
காண்டீபன் சாரதி　　யான தயாளனே
கனமிகு உவணமேல்　　வாகன தீரனே
கதிபுரியும் சுரர்பதியே இது தருதியே. (பா)

பெருத்த கோவர்த்　　தனகிரி குடையென
கரத்திலேந்திய　　வானே மாமரம்
துளைத்து வாலிவை　　வென்ற சராசர
மனைத்துமாய் நிறை　　வான கிருபாநிதி
அலைகடல் துயின்றவர்　　அச்சுதவானவர்
ஆயர்கள் தன் மனை　　வாழ்ந்த சகாயவர்
அடி தொழும் சுந்தர்　　மிடி தவிர் மாதவர்
அருமறையே வரமருளே காரணரியே (பா)

6 ராகம் சுத்த தோடி　　தாளம் ரூபகம்

(காணமாமயில் கடவுள் கடம்பன் என்ற வர்ண மெட்டு)

பல்லவி

தேசிகானந்த　　சிவனார் குமாரா (தே)

அநுபல்லவி.

தேவாதி தேவர்கள்　　யாவரும் கொண்டாடும்

மகுடம்

கிங்கிணி கட்டிடு　　முருகோனே

அகமதில் நிறை திரு அரக
விகசிதபதமதை பருள்குக
சரஹணபவ அறுமுகவனே
கானமயில்வாழ் கருணைக்கடலே
காரணமானபரா பரி பூரண ஞான கிருபாகர
நாரணன் மால்மருகா எனைக்காருனதடி
மலர் தொழுதேன் (தே)

சரணம்.

ஆசினியெங்கும் படர்ந் தோங்கிய யசா
அமரர்களின் சிறை தீர்த்தவா கெம்பீரா
பூஜித ஞான சித்தாந்த சர்வேஸ்பரா
பூதலமே நிறை ஜோதியே ஆதரித்தாள்
வதுன் கடன் மன வாதனை தீர்த்திடும்
சுந்தரம் தீதற கண்பார் சந்ததம் (தே)

ராகம் தேசிகதோடி தாளம் ஆதி

(புது வர்னமெட்டு)

பல்லவி

வேலாயுதா அறுமுகனே
சிலா கழுகாசல குகனே (வே)
விகசித பதமருளாகர சரவண (வே)

அனுபல்லவி

கோலாகலா ஷண்முகனே
குருமுனிக்குபதேச மருளிய குருபரா (வே)

சரணம்

ஆலோலமிடு குறமானை

ஸ்ரீதாவலுடன் மணந்தோனே
தாலமெங்கிலும் புகழ்வோனே
சமர கெம்பீர அம்பிகை யருந்தவ (வே)

தொகையறா

பாலபிஷேகனே மேலான யோகனே
பரப்பிர்ம்ம சொரூபானந்தா ஆ ஆ
வேலாலசூரரை மீளாது வதை செய்து
விண்ணவர் துயர் தீர்த்த கந்தா க க

பாட்டு

வேதபாராயணன் மருகா
வேங்கைமரமாகிய முருகா
பூதநாதனேமன திறங்கா
புகழ்துதி சுந்தரம் சந்ததம் வந்துகார் (வே)

ராகம் இந்துஸ்த்தான் பேஹாக் தாளம் ஆதி

(சுயராஜ்யம் அதிக தூரமில்லை என்ற வர்ண மெட்டு)

பல்லவி.

ஸ்ரீ ரகுபதி கருணா வரதா ராமா
சீதை மனோகர கோவிந்த பூமா (ஸ்ரீ)

அநுபல்லவி.

கிரிதனைக் குடையாய்க் கொண்டாய் ஹரிபரந்தாமா
கிருபாநிதியே ராகவ க்ஷேமா (ஸ்ரீ)

தொகையறா

அரிமீது ஜயஜெதி கரிமூல மௌனவோடி

விரைவாய் வந்தாதரித்த நிதியே
சிறியேனின் குறையாவும் தீர்த்தாளு
மிதுவேளை தேவனே உம்பர்பதியே

சரணம்.

உரியேறி வெண்ணையுண்டவா ருக்மணி சமேதா
உன்னையல்லாது துணை யார் சூதா (ஸ்ரீ)

தொகையரு

இரணியசம்மார கெம்பீர உதாரண
யேகாந்த வேதமுடிவே
தரணியை யோசடி யளந்தண்டமுண்டாய்
சர்வஜீவ காருண்ய வடிவே

பாட்டு

பரிதல்வைத்தருள்புரி வானந்த கோபாலா
பாலன் சுந்தரம்பாடிப் புகழ் கோலா. (ஸ்ரீ)

9. ராகம் பைரவி தாளம் ஆதி

(தொனித்திடும் சங்கமென்ற வர்ன மெட்டு)

பல்லவி

கார்மேக வண்ணா கமலக்கண்ணா
கண்ணா கண்ணா கண்ணா (கா)

அநுபல்லவி.

காரும் கண்பாரும் கலிதீரும்
கனமலாடி யதையருள் (கா)

சரணம்

ஏதுபர் கெருடன் மீதேறி நடன
ஏக நல்யோகா அம்தேக தின
பிமைப்வர் துதிபுரி (கா)

(2)

வேத வேதாந்தமே விளங்கும் சித்தாந்தமே
வீராதிவீரா கெம்பீரா திருமகளுறை வரதனே (கா)

(3)

தாரகநாமனே தாரணியுண்டோனே
சாதியான மெஞ்ஞான பரிபூரணனே ஹரி (கா)

(4)

ஜெய ஜெய கோபாலா தசரதனின்பாலா
தீராதி தீரா உபகாரா சுந்தரந்தமிழ்க்கினியவா (கா)

(ராகம் பியாக் தாளம் ரூபகம்)

(உமையாருளிய முருகனே என்ற வாண மெட்டு)

10 (ஓடிக் கண்ணிகள்)

அரிஹரி நாரணன் மருகா ஆறுமுக குருபரா
இதுதகி வாமே தரும் பிருவினை தவிருனதிரு
பதமலர் மறகிலேன் (அ)

அந்தரத்தோ குந்துகிக்கும்
செந்தில் நக ரங்கிருக்கும் (அ)

சிவனருள் புதல்வனே ஜெகம்புகழ் தென்பரங்
குன்றினில் மேவியதேவே பவமறுத்தெனை
பொருத்தருள்புரி வர வெகு துலையா (சி)

சிந்தித்தேன் வேல் கந்தமல
ருந்தன்பாதம் தந்தருளும் (அ)

அனுதின முனதடியிணை சதமென மன
மகிழ்வுடன் துதித்திடும் மைந்தனின் குறை
தவிரதிபதி அந்தரரின் துயர் தீர்த்தவா (அ)

அன்பொடு இன்பதம் தந்திடும்
வம்பன் குலமதை மடித்தவா (அ)

அருமறை தொழும்சிர கிரிவளர் முருகனே (அ)

மரகதமயின்மிசை வளர்வோனே மனதொரு
நிலையிலாதுனையெண்ணி மயங்குரேன் மறவி
வந்தணுகாது சந்ததஞ்செந்தமிழ் சுகந்தருள் (ம)

மண்டலம்புகழ் மிகும் கந்தனே
மதியணிவோன் குபதேசனே
மலைப்பாவை யருள்கோவே ஜெகத்தேவே கிருபைதாவே

ராகம் கமாஸ் தாளம் ஆதி

(பஞ்சாப் படுகொலை யென்ற வர்ணமெட்டு)

பல்லவி

நெஞ்சே நல் பக்தியை நீ மறவாதே நின் (நெ)
நீதத்துடனிரு சாதித்தயானு (நெ)

(அநுபல்லவி)

பஞ்ச பாதகத் தொழில் பறநிடாக் கொற்றவன்
பொற்பதம் பெற்றிடு (செ)

நீதிநெறிமுறை பேசிடுயாவரா காதாபெளமனு
வாதை தவிர்மட (செ)

சித்தக்குருபர சத்திச்சரவண முத்துக்குமரனை
சந்தித் தொழுகலம் (செ)
சிரித்துப்புரத்தை எரித்தவன் கரித்தோலுரித்துத்
தரித்தானிருத்துக் கருத்தில் (செ)

துடுக்க ராவணன் படைக்களத்தொரு
கொடிக்குளம்பினால் முடித்த ராமனின் (செ)

கஷ்டவாழ்வை நம்பி நம்பி கஷ்டப்பட்டுள
லாதே ஜடம் பொய் (செ)

(சரணம்)

கஞ்சருத்திய சிவத்தை அஞ்சலிப்பாய் தன்மையே
நாத விநோதவேதன் பாதமலருண்மையே
பஞ்சாக்ஷரப் பெருமான் பஜனை செய் நன்மையே
பாலன் சுந்தரத்தமிழ் பக்குவமையத்துடன்
மிக்கவே தக்கிட திடதக தரிகிட ததின்னி
னைத்தோமெனை (செ)

12. ராகம் அடாணா   தாளம் ரூபகம்

(முருகன் திருமால் மருகன் என்ற வர்ண மெட்டு)

பல்லவி

கந்தா சமுகாசல மேவியவா   உந்தன்
குஞ்சமலர்ப்பாதம் தஞ்சம் வந்தாதரி (க)

அனுபல்லவி

சிந்தத மயிலேறும் சங்கரன் புதல்வா (சு)
சற்குருபரசிவ சரவணா
நற்கெதி தந்திடும் முருகனே (க)

சரணம்

தந்திமுகனுக்கிளைய தயாபரா சச்சிதானந்தமே
எங்கும்
தானே முளைத்துத் தழைத்து நிரந்தரமான தேசிகமே
சிந்தை குடிகொண்ட தேவா அமுர்தமே
தீராப்பிணி தவிரும் ஆறுமுகமே
சந்திரசேகரனுக் குபதேசமே
சாற்றிய அன்பர் தயாளா
கூற்றணுகாதருள் லோலா (க)

(2)

சூரசம்மாரபரப்பிர்ம்ம கெம்பீர ஜோதிவடிவேலா
பரி
சுத்தமெய்ஞ்ஞான சுயம்பிரகாசமே தோத்திரம் குறுள்ச்
சீராறு காவிநோதனே சீலா
ஏழை சுந்தரம் தமிழ்க்கனுகூலா
பரராதியண்டம் பாவிப்படர்கோலா
பக்ஷமாலச்சுதன் மருகா
தக்ஷணாமூர்த்தியே அாகரா (க)

---

13. ராகம் கேதார கௌளம் தாளம் ஆதி

(தயோஷண்முகா என்ற வர்ண மெட்டு)

பல்லவி.

சிவா சங்கரா திரிலோகநாயகாதி மூர்த்தி (சி)

அநு பல்லவி

ஸ்ரீபியே உனையே மறவேனருளே தருவாய் இருநிதி (சி)

தேவ தேவனே சம்போ (சி)

சிவனே பவனம் நிறை குருபரனே
கௌனமுறை ஜெகதீசனே கைலாசனே (சி)

சித்தர் தவ முத்தர் புவி எத்திசையும் நத்தித் தொழும்
ஜீவகாருண்யனே வா (சி)

சரணம்

திரித்துப்புரத்தை எரித்த சங்கரர்
தில்லையிலாடிய வல்லபனே பரா
திருவே கருவுருவே சுகமருவே அரி அயனறியும்
தேடியும் காணாதவா (சி)

தேங்கு கெங்கையை செஞ்சடை வைத்தவா
செம்மலேமா கரிதன்னையுரித்தவா
துங்கமலைப்பாவையாளை மணந்தவா
சுடரேவரு மிடரேதவிர் கடலேல் கோடிமுடி
மேவிய ஜோதியே சுந்தரனேசார் (சி)

---

14. ராகம் பியாக் தாளம் சாப்பு

(பாலபிஷேகா என்ற வர்ண மெட்டு)

பல்லவி

பரப்பிரம்ம மோனப் பராபரமே அண்ட
பகிரண்டமெங்கும் நிறை சிவமே (ப)

அநுபல்லவி,

வரப்பிரசாதம் தந்து காத்திடவே சர்வ
வல்லபனே மா சதா சிவமே (ம)

தொகையறா

பாலகன் நான் சதாகாலமுமுனதிரு பாதமே
சதமென நம்பினேன் பொருளுடைமை
ஆலகால விஷத்தையே யுண்டமா [illegible]
ஆதரித்தாளும் செஞ்சடையா.

சரணம்

பசுபதி மகிழும் பரமதயாளா
கைவர்முப் புரமெரித் [illegible]
பாசவலைக்குள் வீழாதொரு மார்க்கம்
பரிபாலித்தருளுவ துன்பாரமே. (ப)

தொகையறா

கூர்கொண்ட சூலமும் சீர் கெங்கையா முடியின்
மேற்கொண்ட குஞ்சர தோலுரித்தவா
யாருண்டமாலும் அயனறியாத பகவானே
பார்த்திருப்பது மழகோ பஞ்சாக்ஷரனே
சித்தத்தமர்ந்தவா

பாட்டு

குளரிக்குளரி உரை தொழுதிடும் பாலன்
குறைதவிர்த்திகபர சுப அனுகூலன்
கோரினேன் சுந்தரம் சந்த்ர சேகரனே
பரிபூரணமா தவமே (ம)

---

15. ராகம் பிலாக் தாளம் ஆதி

(மூர்த்தியாய் வந்துதித்த என்ற வர்ண மெட்டு)

பல்லவி

செந்தில் வாழ் கந்தன் துதிசெய்சதா மனமே
மனமே மனமே மனமே.

அநுபல்லவி

சிந்தா குலந்தவிர்க்கும் தேவனைத் தினமே
தினமே தினமே தினமே

சரணம்

அந்தரர்க்காய் கொடிய அசுரர் குலமறுத்த

மகுடம்

அன்பாகத்தில் நிறைகுரு சண்முக
சின்மய ஞானப்பரம் பொருளாகிய
சந்தமிகு மயிலோ னருள்பெரு கனமே
கனமே கனமே கனமே

நந்திக்குரைத்த குகனடியிணை தனமே
தனமே தனமே தனமே (செ)

(2)

உரியேறி வெண்ணெயுண்ட
ஹரிமருகன் பண்டாரம்

மகுடம்

உக்ரம வீரக்ருபாகரத் தற்பரன்
பொற்பதம் நம்பிடில் நற்கதி கிட்டிடும்
ஓங்கார வேல்முருகன் உதவிபதம் தேடு
தேடு தேடு தேடு

தூங்காதே பக்திசுக நெறிதனிற் கூடு
கூடு கூடு கூடு (செ)

கவணெறிமான்மகளை கானில் மணந்த பூமான்
ககனச்சிங்காரன் பரவுபகாரன் நகைமிகுவாக
னருளின் குமாரன்
கருணானந்த வடிவேலாயுத சீலன்

சிறுவன் சுந்தரந்தமிழ்க் கருள் தரும் லோலன்
லோலன் லோலன் லோலன் (செ)

85914

16. ராகம் சிந்து பைரவி தாளம் ரூபகம்

(மாரன் வாதையினாலே என்ற வர்ணமெட்டு)

பல்லவி

ராமாநீதுணையே ரவிகுல (ரா)

அநுபல்லவி

நாகமீது பள்ளிகொண்ட லோகரக்ஷகாதி மூர்த்தி (ரா)
நாதவிந்துவான வேதனந்தமாதவா முகுந்தா (ரா)
நலமிகு மலரடியருள் மறைமுதல் புகழ்திரு நாஹரிஜெய (ரா)
நகைபொற் கமலரிதற்பரா தகமெய்க்கருடன் மிசைவளர் (ரா)
நாமமாயிரம் படைத்த ரெகு (ரா)

சரணம்

வாமனகூர்மவதார ஸ்ரீ மாயனே
வானவா தசரதபால குமாரனே
கோமளதேவி ஜானகிமணாளனே
கொண்டல் மேனியர்க்குபோப்பிரகாசனே

மகுடம்

குல்லைத்தார்புனைசந்தம் வல்லதேவனே சுந்தரம்
அல்லல் தீர்த்தருள் சந்தம் அகிலமெங்கும் பூத்தபகவ (ரா)

---

17. ராகம் காப்பி தாளம் ஆதி

(டான்சு வர்ணமெட்டு)

வானவர்தொழும் ஞானபண்டித
மோனதற்பரனே (வா)
வருவாய் குருவே வரமே தருவாய் இந்த
வர்மம் செய்திடலாமா (இ)
வாதனையே தீரும்தவ யோகிமகிழ் பூரணனே (வா)
கோலமா மயில்மிசை நடமிடு குகா
பால சண்முகனே (கோ)
கொடுஞ்சூரரைவே ரறவேல் விடுத்தாய் திருக்
கொண்டல் வண்ணனின் மருகா (இ)

கோலவள்ளி நாயகியை சேலமுடனேமணந்த (வர)
சீர்மிகுந்த கழுகாசலீசனே
தெய்வபூஜிதனே (சீ)
சித்தம்வை நித்தமும் பக்தியாய் நத்தினேன் அருள்
தேவதேவனே நாதா (அ)
தேவசிவ காமியருள் சுவாமிவடி வேல்குமரா (வா)
நாயேனுன திருபதமலர் நம்பினேன்
நற்றுணை புரிவாய் (நா)
நாதசங் கீதவே தாந்தமே நீதமே அந்த
நான்முகனைச் சிறைவைத்தாய் (அ)
நாகம்புனை யேகபர னுர்க்குரைத்த லோககுரு (வா)
தாயுந்தந்தை யென்றேதும் சுந்தரம்
சந்ததம் கார்ப்பாய் (வா)

18. ராகம் கமாஸ் தாளம் ஆதி

(மயில்வாகனமே என்ற வர்ணமெட்டு)

பல்லவி

அறுமாமுகநாதா அருள்தருகா

அநுபல்லவி

ஆதரித்திடுவா யேயித்தருி பாதமேகெதி முறஹரிமருகா (அ)
ஆகர குருபர சரஹண ஜின்மய
முருகனே பன்னிருகரவடி குமரனே (அ)
அந்தரி சுந்தரி யம்பிகையருந்தவக்
கந்தனே செந்தியில் மேவிய தம்பா (அ)
அருளைக்கொடும் கருணைக்கடல்
சரணமே மிடிதவிரதிபதி (அ)

சரணம்

ஆனந்த நாதா அழகிய பாதா (ஆ)
அமரர் சிறை தவிர்த்த ஞான சங்கீதா! (ஆ)
ஏனின்னும் சூதா ஏழைமேல் வாதா (ஏ)

எந்தனைக்காத்திடும் சந்ததம் சுந்தரம்
செந்தமிழ்க் குகந்தருள் தந்திடும் வந்தனம் (அ)

19. ராகம் தேசிகத்தோடி தாளம் ஆதி
(பவனகிரியதனிலுறை என்ற வர்ணமெட்டு)

பல்லவி

புவனம்உண்ட புகவின்விண்டு
புகழ்பாதா கமலனந்தா (4)

அநுபல்லவி

உவணமதனிலே நடமிடும் (உ)
ஒளிகுலவால அச்சுதா (4)

தொகையரு

புண்ணரியின்மேல்த்துயின்றரிஹரி இரணியன்
வயிர்கிழித்தெரிந்த பூமா பூமா பூமா
புரைபொருத்தருள் புரி உரியேறி வெண்ணையை
திருடியே உண்ட ருமா ருமா ருமா

சரணம்

பவனமிசை நிரைபவனே
பதமலரிணை துணைசீமானே (ய)
கௌனமதனிலே யனுதினம்
கருதும்சுந்தரன் வருமைத்தீர்த்தருள் (4)

20. ராகம் சிந்து பைரவி தாளம் ரூபகம்
(கழுகுமலைக் கின்னம் கோர என்ற வர்ணமெட்டு)

பல்லவி

சுருளிமலைக் கந்தநாதா என்னை
சோதிக்காதே வினைதீரும் ஆறுமுகவனே (சு)

அநுபல்லவி

தோகை மயில்மீதுலாவும் ஏகலோக நாயகனே (சு)

தோத்திரம் காஹரி மருகனே
கார்த்தருள் மெய்ஞான வேலா (சு)
சூர்க்கண்ணுள் துயர் தீர்த்த
யீராறுகாகிருபாகரா (சு)
சுத்தநிற் குணமதான தித்திச்சுகபர மூலா (சு)
துணையுன தடியிணை மிடியறு
முனியறு மறை தொழும்படிபுகள் (சு)

சரணம்

அருணகிரிக் குபதேசித்த பரனே
ஆனந்த வல்லியின்பால குமாரனே (அ)
இருளறக் கண்பாரெனய்யா மயூரனே
எங்கும் நிறைந்த வானந்த சிங்காரனே

மகுடம்

இகபர சுகந்தரும் குருபரா
மறலி வந்திடா தொருவரமருள்
அகமதில் நிறைதிரு முருகவே
ளரகா குறமகள் பாகனே (சீ)
அஞ்செழுத்தால் சூரர் வெந்திடச் செய்தவா
அதிதியெனக் குனையன்றியார் ஞானவா (க)
கஞ்சன் தனைச் சிறைவைத்த விநோதவா
கர்த்தா சுந்தரம் தமிழ்க் குபகாரவா

மகுடம்

காண வாரணன் முகந்தனக் கிளைய
வுதாரண பூரணவானே பராபரா நீரணி
வேல்கர மேந்திய காவலா (சு)

---

21. ராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

(துலங்கும் செம்பொன் கோபுரம் என்ற வர்ணமெட்டு)

கண்ணிகள்

அனந்துயிர்க் குயிராகி விளங்கிடும்
நினைப்பு மறப்பென நின்று உலாவிடும்

அன்பர்க்கருளும் மாதவா ஹரி ஹரிஸ்ரீ
வைகுந்தநாத கேசவா
அனவரத முனதடியிணை சதமென
கனவிலும் மறவாது துதிபுரி
அடியன் வினைபகற்றவா அண்டர் பணியும்
ஆலிலைமேல்த் துயின்றவா (அ)

(2)

ஜொலிக்கும் ரத்தினகிரிதனில் வாழ்பவா
அழைக்குமிச்சிறு பாலனின் குறைதவிர்
குன்றைக் குடையாய்க் கொண்டவா கோபிகள் மோகா
சண்டப்ரசண்ட ரூபவா அந்தக்
கொடிய ராவணன் படையொரு கணையினால்
படியில் வீழ்த்திய வடிவமிகுத்தவா
கோதண்ட மேந்தும் வல்லவா குஞ்சிதபாதம்
தந்தாள் தேரினிலூர்ந்தவா (அ)

(3)

தசவதார தயாபர நாதனே
கஜம் தனக்கருளிய ஸ்ரீ ராமனே
தண்டகாருண்யம் சென்றவா தசரதன்னருள்
சாமள ரூப ராகவா
சங்கு சக்ர தர முரஹரி ரெகுபதி
மங்கை ருக்மணி மகிழும் தயாநிதி
தந்திர மான்பின் சென்றவா சமர்க்களத்தில்
தானொருவனாய் நின்றவா (அ)

(4)

ஜெனன மரண வேதனைகளை நீக்கிடும்
சரணம் சுந்தரம் பவவினை போக்கிடும்
தெரிசனம் தந்தென்னைக்காவா ஜெகமளந்த
தீன தயாள ஞானவா
திருக்கமல மலரடிதுணை நம்பினேன்
அருள்க்கடலே வரதனே மனம் வெம்பினேன்
தேவர்க்கிடுக்கம் தீர்த்தவா ஜென்ம சாபல்யம்
தாரும் வைகுந்த வாசவா (அ)

22 ராகம் தோடி தாளம் ஆதி

(சாராமுக குகா என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

கோகுலஸ்ரீ ராகவா ஜூதிபதி (கோ)

அநுபல்லவி

மாகடல்துயின்றவர் மால்வாசுதேவா (மா)

மாதவனேசித்தா ராமாராமாஜெயஜெய் (கோ)

சரணம்

காகுத்தனேகருணா நிதியேகருணை

புரியும்தருணம் கமலக்கண்ணா (கா

வாகெருடனேறியே சிறியனையாள் (வா)

வல்லமையான கல்லை பெண்ணுருவாகி வைத்த (கோ)

(2)

பூவடிகெதியென போற்றினேன்வன

பொன்னாகாகன போதகுரு (பூ)

யாவனிமோசணமே பாலியும்ரெகு (பா)

பதி சுந்தரம் தமிழ்மீது நிதியருளும் (கோ)

23 ராகம் தோடி தாளம் ஆதி

(யாம்பாபரணபரமதேவன் என்ற வர்ணமெட்டு)

பல்லவி

ராமா கெருட கடன வேதமுடிவே

கலந்தருளுமே திருவடிவே (ரா)

அநுபல்லவி

சூமான்தவ தசரதனருள் புதல்வா ககனம்புகல்வா

ஹரிகேசவா (ரா)

சரணம்

சாமளபகவ சதானந்த யோகா

சங்கு சக்ர தரனே சர்வயோகா

கோமளதேவி திரு மகளுனா வாகா

குருவே ஞானக்கருவே உன் கிருபைபுரி (ரா)

(2)

வாமனு சொரூப விநோத கெம்பீரா
வையக முண்டுமிழ்ந்த வானவுதாரா
கேமனே சுந்தரஞ் செந்தமிழ்க் குபகாரா
நிதியே தவபதியே ரெகுபதியே சித்தா (ரா)

24 ராகம் நாதநாமக்ரீ தாளம் ஆதி
(திருப்பதி வெங்கடாசலா என்ற வர்ணமெட்டு)

பல்லவி

திருக்கழுகாசலீசனே உந்தன்
சித்த மிரங்கியாள எத்தனை நாள் செல்லுமோ (தி)

அனுபல்லவி

உருக்கமுடனே மனதுகசிந் தென்னைக்காரும்
ஓம் சரகணபவனே யருள் தாரும்
குறக்குல வள்ளிமகிழ் குகனே கண்பாரும்
குமரசர் குருபரனே வினைதீரும் (தி)

சரணம்

கருத்தினில் நடமிடும் கமல பொற்பாதா
கண்ணனின் மருக ராவண்ண மெய்போதா
உறுத்தவென் மீதிராது உனதடி தாதா
உன்னையல்லாது துணைமண்ணிலார் நாதா

மகுடம்

உமையாளருள் சுதனேசுரர்தொழும் பன்னிரு கரனேவரும்
பவமே தவிர் பரனே சுகபரி பூரண கிருபாகரா (தி)

மாகதமயில்மிசை வளர்முருகேசா
மதிநதியணிசிவ னார்க்குபதேசா
பரகெதிதாருமெய்யே பவனப்பிரகாசா
பண்டாரத் தெண்டாயுதா பண்ணவர் நேசா

மகுடம்

படியேபுகள் வடிவே துடர்மிடியே தவிரடியேன்மிசை
முடியே கிருபையிலையோ கொடிமுடி மீதமர்பதியேயருள்
கடலே குணநிதியே பரவெளியே ஞானப்பொருளே உன்
கதிசுந்தரம் மொழியுந்தமிழ்கருள் தந்திடும் நிதியேகன (தி)

25 ராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

(சுயராஜ்யம் என்ற வர்ணமெட்டு)

பல்லவி

செந்திருமலேவளர் சேவற்கொடிமுருகா
சிந்திததேனபதமலர் தந்தருளே (செ)

தொகையரு

ஜெகமாயையெனும் கொடிய பந்தபாசத்திலே சிக்கிடாதேழை
முகம்பார்த்து மோக்ஷமருளென்மொழி கேளாதிருப்ப தென்ன
[முறையா

பாட்டு

உனையன்றி உலகத்தில் வேறு தெய்வமுளதோ
உதவிபுரிந்தாதரி நீ அணையே (செ)

தொகையரு

ஓங்காரமென்ற அஸ்த்ரத்தால் சூர்குலமுழு
தொழிந்திடச் செய்த உருவே
நீங்காத செல்வமீந்தருளும் நின்றருள்சதம்
நின்மலனே ஞானகுருவே

பாட்டு

கனமயில் வாகனனே காருத்தன் தன்மருகா
கருணைக்கடலேமறை அதிபிரையே (செ)

யீரடித்தொகையரு

கூப்பிட்டேனுனது செவிக் கேர்க்கலேயோ
குழந்தை வடிவேல் முருகா
மான்பெற்ற மாமகள் மீதுற்ற ஆசையாலே
வேடனாய்ச்சென்ற மால்மருகா
நேர்ப்பட்ட வேடுவர் காணுமுன் கோல்தட்டி
தள்ளாடிக் கிழவனாய் நின்றருகனே உன்
வேல்ப்பட்ட வம்பர்தன்குலம் வெண்ணீறதாய்
வெந்திடச்செய்த விமலனார்மகனே

பாட்டு

உண்மையிதுவும் பொய்யா ஓம் சரகணபவா
உரைகுறை பொருத்தருள் உம்பர்கோனே
நண்பன் சுந்தா நவரசகவி மாலேக்குன
தன்பெனுமாசை தாரும் யெம்பிரானே (செ)

26. ராகம் புன்னகவராளி தாளம் ஆதி

(பூவருந்திருவே என்ற வருணமெட்டு)

வ ண் ண ம்

சீர்சிறந்தவனே திருமால்மருமகனே (சீ)

அந்த

தேன்மொழி வள்ளிக்காய் வனந்தனிலே வேடுவர்
களோடமர் செய்த (சீ)
ஞானபண்டிதனே அருள்மோனதற்பரனே

இந்த

கானிலமிசையே படுமிடியே தவிர்த்திரு பாதமதருள் (சீ)
வேதன் மைத்துனனே வினைதீர்க்கும் சண்முகனே

இது

வேதிவரமே தரும்பதி பூசுரர்துதி யீசன் குமார (சீ)
மாமயில்வனே மறை போற்றுங்கண்ணியனே
மலைப்பாவை யீன்ற நற்கோவே ஜின்மகாதேவே
உந்தனின் சேவை தந்தென்னைக் (சீ)
காப்பதுன் கடனே கழுகாசலப்பரனே

பெரல்லாக்

காலன் வந்தணுகாது சுந்தரப்பாலன் செந்தமிழ்மீது அன்புவை()

27. ராகம் ஜகாநு தாளம் சாப்பு

(புது வர்ணமெட்டு)

பல்லவி.

பாரா முகமேனய்யா பார்த்த சாரதிமெய்யா (பா)

அநுபல்லவி

தீரா ஜெயராமய்யா சிறியேனே (பா)

சரணம்

நாராயணனேவேத பாராயணனேநாதா
பூரணனேபொற்பாதா தாரகநாமாகுதா (பா)

(2)

வீஞானமாய்கையாலே நானிந்தமண்ணின்மேலே
தோணுதலேந்தேன்மாலே துணைநீயே (வீ)

வானோர்தொழும்சுகுண ஞானவரதாகன
தேனாள்ஜானகிதினம் மணமகிழும் இன்னும் (பா)
சர்வபுவனம்காட்டி சாரத்யம்செய்துகாட்டி!
கெர்வப்படையைக்கூட்டி முடித்தோனே (ச)
வர்மமாமேரயென்யேலே கர்மவினைதீர்வேனே
மர்மமேதெனசெந்தானே தர்மகுருதந்தாளே (யா)
பக்த்தன்சுந்தரம்பாடும் பண்மாலைதனைச்சூடும்
முக்திக்குவித்தாயாடும முதலோனே! (ப)
சித்தம்வைத்தாள்திருவே ஜெகாகஞ்காமருவே
பக்தர்க்குள்ளாடுருவே பாமானந்தகுருவே (பா)

28. ராகம் காப்பி தாளம் ஆதி
(மரகத மயில்மீதேறியே வருவாய் என்ற வர்ணமெட்டு)

பல்லவி

அரகா குருபரனே சரவணனே
ஆதரிப்பாயருளே தருவாயே (அ)

அநுபல்லவி

உரகணிசிவனு ரானருள்குமாரா (உ)
உக்ரமவீரக்ருபாகர நாதனே (அ)

சரணம்

திருஹரிமருகானே வடிவேலா
சேவடி தந்தெனையாளனுகூலா (தி)
குருமுனிக் குரைத்தாய் கொடும்பகை முடித்தாய் (கு)
குஞ்சிதபாதமே தஞ்சம் வந்தாதரி (அ)
அரிமிசை நடமிடு மானந்த நாதா
அம்புவி கும்பிடும் சம்ரமநீதா (அ)
அழகியதோளா அன்பர் தயாளா (அ)
அண்டினேன் சுந்தரன் வந்தெனையாண்டருள் (அ)

29. ராகம்பியாக் தாளம் ஆதி
(தேனூரும் பூங்கமலம் என்றவர்ணமெட்டு)

பல்லவி.

ஞானானந்தாமறை நாதனேதேவா அருள் (ஞா)

அநுபல்லவி

தேனுபிஷேகா சிகிவளரேகா (தே)
தித்திச்சகப்ர வித்துக்கதிபதி
முத்துக்குமரனே சித்தத்துயாறு (ஞா)

சரணம்

காக்கொருயேழை நம்பினேன் தாலோ (கா)
காகத்தனிசிவன் பாகதமர்சிவ
காமித்தவகுரு சாமித்துரைசிவ (ஞா)

(2)

வேதவேதாந்தா விகசுசிதபாதா (வே)
விமலர்க்குரைத்தறு முகவத்திருஹரி
மருகா அருமறை முடிவினில்நடமிடும் (ஞா)

தொகையரு

வீணனமாய்கை யெனும் பாசத்தூடர்விலே
வீழ்ந்து வீழ்ந்துலன்றிடாது
ஞானமெனுமமுர்த வீடருள்செய்
மெய்ஞான சித்தாந்த முத்திமுதலே
மோனமெனுமானந்த வாரிதி முளக்கே
அவித்தே அவித்தின் முளையே
ஊனிலிடையுயிராகி யேகமாகி உருவாகி
கருவாகி ஒங்கும்சேயே

பாட்டு

சுந்தரபாலன் துதிக்கனுகூலன் (சு)
சுகுணச்சரவண பவனெக்கமுகா
சலனேகுமாதற் பாதிருமுருகனே (ஞா)

30. ராகப்பியாக் தாளம் ஆதி

(கல்யாணம் செய்துவையுமே என்ற வர்ணமெட்டு)

பல்லவி

கந்தா கார்த்திகை பாலனே கனலோலனே (க)

அநுபல்லவி

கானமயில்வீரனே ஞானபண்டிதகோனே (க)

சரணம்

கண்ணனின் மருகா வண்ணப்பிரகாசா
காமனை எரித்தான் செவிக்குபதேசா
பண்ணவர் துதிபுரி பரங்கிரிவாசா

மகுடம்

பதமலர் கனவிலும் மறகிலேன் சரஹண
பவகுக முருகனே வரமருளாகரா (க)

வாக்கு மனதுக்கெட்டாப் பாக்கியப் பொருளே
வாசியின் மிசையூரும் கனதிருவருளே (வா)

போக்கிடும் பவவினை புவியிடையிருளே
பொடி படரும்பதுந்தன் கடனறு முகவனே
சரணமே குருபரா கருணையங்கடலே வேல் (க)

சுந்தரந் தமிழ்க்கருள் சுகுண சர்வேசா
சுருதி முடிவில் நடமிடுஞ் ஜெகதீசா (சு)

அந்தரி யுமையருந்தவ முருகேசா
அருமறை நாயகனே மனக்குறை தவிர்
பரவெளி நிறைகுரு சூரகுலதீர சம்மாரனே (கா)

---

31. ராகம் இந்துஸ்தான் தோடி தாளம் ஆதி
(புதுவர்ணமெட்டு)

பல்லவி

ராமபஜனை செய்தால் மனமே உனக்கொரு
நாளும் குறைவில்லையே (ரா)

அனுபல்லவி

காமியாசையால் தேங்கி நின்றாய்
காயமே நிசமென்றே மாய்கையிலுளன்றாய்
தாய்தந்தை யவரன்றி வேரில்லை கண்டாய்
சதா பக்திசெய் சாஸ்பத மூண்டாம் (ரா)

சரணம்

பிறந்து பிறந்து மண்மேலிருந்தென்ன சுகம்பெற்றாய்
பேரின்பத்தை விடுத்து பெருமானடி மறந்தாய்
வருந்தி வருந்திவள்ள லடியிணை தஞ்சமென்று

மகுடம்.

வருமிடி தவிரென முறஹரி பதமல
ரனுதினம் அதிபுரி பரிவினில் நடமிடும் (சா)

தன்னுக்குள் தானாய் நின்றோன்
சாகரம் மேல்த் துயின்றோன்
விண்ணவர் துயர் தீர்த்தோன்
வேதமுடிவில் நின்றோன்
கண்ணுக்குள் மணியென
கலந்தோன் கம்சனை வன்ற
கரிதனக்கருளிய பரம்பொரு குடையென
கரந்தனிலெடுத்தவ னரிஹரி சதமென (சா)

ஜென்ம சாபல்யம்பெற செய்வினை முழுதற
உன்னுள் விளங்கும் ஜோதி ஒருவனையிருகரம்
கொண்டு சரணம் செய்வாய் சுந்தரம் பன்னலுறம்
கோதனைக் காட்டினி லோட்டியே மேய்த்தாயர்
வீட்டினில் பால்வெண்ணை ரூட்டியாய் உண்டமால் (சா)

32] ராகம் பியாக் தாளம் ஆதி
(அருள்க்கடல் ஞானனந்தம் என்ற வர்ணமெட்டு)

பல்லவி

உரகத்தின் மீது ஜயனித்த மாதவா
உம்பர்கள் போற்றும் உக்ரமவீர ராகவா (உ)

அனுபல்லவி

ஊர்திக்கருள் தந்தவா உலகளந்து நின்றவா ஸ்ரீ
ஓதுமித்தா திக்குன் பாதம கெதி
உதாரணப் பரிபூரணக் கருணாகரக் கிருபாகரனே (உ)

தொகையறா

வாதனே கெம்பீரா சுருதி முடிவினிலாடும் வான்பொருளே
சரணமே ஜானகிமணாளவா உனைநம்பினேன் தந்திடும் திருவருளே

சரணம்

தசரத குமாரனே தாடகை சம்மாரனே
சந்ததம் சுந்தரம் செந்தமிழ்க்கே
சாயுக்ஷம் தாதா ரக்ஷிஜெகரக்ஷகா
மச்சவதாரா (உ)

33 ராகம் பிலாகரி தாளம் ரூபகம்

(என்ன கேள்விமுறை என்ற வர்ணமெட்டு)

பல்லவி

வண்ணமாயவா வானோர்பணிப்வா

அனுபல்லவி

வந்தாளிவ்வேளை னந்தாசெந்தாளைத்தந்தாதரி ஸ்ரீ (வ)

சரணம்

கண்ணனே கரியமாலச்சுதனே தேவா
மண்ணை யளந்தவா கண்ணுதலே காவா
எண்ணுள் நடிப்பவா எங்குமாய் நிற்பவா
ஏகா மெய்க்குருவாகா சாமளதேகா சுரர்துதி (வ)

(2)

கர்ப்பம் துதிக்கும் கருணாகா நாதா
நற்பதவி தந்தருளுவாய் பொற்பாதா;
சர்ப்பத்தின்மீது ஜயனித்த மால்வேதா
தஞ்சம் யேனின்னம் வஞ்சம் மாமனான
கம்சன் சம்மாரா (வ)

(3)

சுந்தரபாலன் துதிக்கும் பிரகாசனே
னந்தனே வந்தனம் செந்தமிழ் நேசனே
சந்தத முகுந்தனே வைகுந்த வாசனே
சத்தேதநபா சித்தே அர்ப்புதக் கர்த்தா ரெகுபதி (வ)

---

34 ராகம் தேசிக தோடி தாளம் ஆதி

(வனசாக்ஷி என்ற வர்ணமெட்டு)

பல்லவி

சிங்காரா சிரகிரிவளர் பவலங்காரா (சி)

அனுபல்லவி

திடமேயருளும் கடவுள் குமாரா (சி)
ஸ்ரீவரதன் மருகா வள்ளிமோகன கன (சி)

சிகிமீதுலாவும் அகமதில் வாழும்குக
போதவேத சங்கீத கெம்பீரா (சி)

திருவுதாரா சூரசம்மாரா கருணாகரா
முருகவீரா (தி)

சரணம்,

பூனைமலரடியருள் வதனப்பிரகாசா
பொடிபடவுணர் படையறுத்தசர் வேசா
நினைவதில் நடமிடு மடியவர் நேசா
நித்யானந்தா முத்திதந்தாள் பக்தன் சுந்தரம்
பாடும் சொந்த (திரு)

---

35 ராகம் தேசிகதோடி தாளம் ஆதி

(சோமசேகரனருளும் என்ற வர்ணமெட்டு)

பல்லவி

சாமிபரந்தாமா உன் தஞ்சம் ராமா (சா)

அனுபல்லவி

பூமிபாரம் தீர்த்த புயல் வண்ணனே
என் மனத்துள்ளினின்றாடும் ஸ்ரீ (சா)
நேமியுண்ட ஆதி நாராயணா ஆனந்தஜோதி
நீலமேக ரூபஞான மூர்த்தி கமலப்பதமே தந்தருள் (சா)

சரணம்

தீராப்பிணியகற்றும் செங்கையனே
திருலக்ஷ்மி பாகா ஹரி செங்கண்ணய்யனே
காரோர்வடிவு கொண்டவா மெய்யனே எதிர்த்த
கஞ்சனை நெஞ்சைப்பிளந்தவா குஞ்சிதமாயனே
வஞ்சகா அஞ்சலிதேன் குரு (சா)

(2)

ஆழியானே வேலை யணையாளும் நாதா தீர
வாலியைச் சம்மாரம் செய்தவா விநோதா
தாளிணைகெதி கருணைபுரியும் வேதா பார்த்த
சாரதியுன்பதம் சேர்த்தருள் சுந்தரம்
கூருந்தமிழ்க் குபகாரி சவுந்தரா (சா)

---

36. (ராகம் கமாஸ்) (தாளம் ஆதி)

புதுவர்ணமெட்டு.

பல்லவி

மாமயில் மிசை நடமிடு குகனே
மலர்ப்பதமருள் முருகனே (மா)

அநுபல்லவி.

மதியணி சிவனருளிய பாலா திருஹரியவன்
மருகா சூரர்கருவறுத் தறுமுகா (மா)

சரணம்.

மங்கைவள்ளி மணவாளா செங்கையா பூ
எங்குமாய் நிறைந்த யிறைவனே சரணமே
மண்டலம் புகழும் அண்டர்கள் தொழுது
கொண்டாடுய பண்டித குமரனே தருணமே
மணி நவமணி சிவநகைமணி சுப்பிரமணி
சுரர்மணி குரு பழனியங்கிரி வளர் (மா)

(2)

சோமன் தன்னைச் சடையே தரித்த
சிவனார்க் குமாரத்த அம்சாஹண பவனே
சோதிக்காதே மனவாதை தீர்த்துமெய்ப்
போதம் வீடடைய புரிவாம் பாலே
ஜோதி மயமான தவயோகிகள் மகிழும் சிவ
ஞானபரனே சுந்தரம் தீதகற்றி விஞ்சைபுகல் (மா)

---

37. (ராகம் கமாஸ்) (தாளம் ரூபகம்)

(சுஜன ஜீபனு என்ற வர்ணமெட்டு)

பல்லவி

கருணை தாருமே யீசா கடைக்கண் பாருமே
ஈசா கருணை தாருமே (க)

அநுபல்லவி

தருணம் காருமே கங்கைதனைச் சுமந்தோனே (த)
சங்கரா கிருபாகரா கருணாகரா நாதனே யீசா (க)

சரணம்.

கரிதனை உரித்துப் போர்த்த சமல நாதனே
சிறியன் குறைபாவும் தீரும் திகழ் விநோதனே (கரி)
காளை வாகனா அருள் கனக பூஷணா (கா)
காரணா பரிபூரணா சிறுபாலன் சுந்தரனையாள் யீசா (க)

---

38. (ராகம் சகானா) (தாளம் ஆதி)

அய்யா பழனிமலை வேலா என்ற வர்ணமெட்டு)

கண்ணிகள்.

அய்யோ பொய்யுலக பந்தம்
அதிலிருக்க இருக்க நிர்ப்பந்தம் (அ)
பொய்யான கடவுளே சொந்தம்
அதை மறந்தலைவார் சளனந்தம் (அ)
ஒய்யார மாதர் மையல்போக்கி உலக
ஒருவனை மனதினில் நோக்கி (அ)
கையார மலர்கொண்டு தாக்கி கள்ள
மாந்தரி னுறவதை நீக்கி (அ)
ஜென்பம் சடத்தேறக் கோரி
ஜெகநாதனை யனுதினம் கூறி (அ)
பண்ணவர் துதிக்கும் முராரி திரு
பகவனைத் துதிமனந் தேரி (அ)
ஜீவகாருண்யமே தேடு உந்தன்
ஜீவன் முத்தி யடையசு கூடு (ஜீ)
பாவலர் புகள்வோனைப் பாடு தினம்
பரகெதி யடையக் கூத்தாடு (அ)
எப்போ திறையை மனதிருத்தி
ஏகலோக நாதன் துதிவழுத்தி
தப்பாது சாம்பவ மூர்த்தி
சங்கீத பஜனைசெய் கீர்த்தி (அ)
போதும் போதும் பட்ட துன்பம் கன
பூபதி யன்றியார் சொந்தம்

ஏதும் கூடவாராப் பந்தம்
ஏழை சுந்தரஞ் செந்தமி ழானந்தம் (அ)

---

39. (ராகம் பியாக்) (தாளம் ஆதி)

(விவேகானந்தா என்ற வர்ணமெட்டு)

பல்லவி.

திருவானந்தா வேதாந்த முகுந்தா ராமா (தி)

அநுபல்லவி

ஜெகத்திட மருத்தவ மிருத்தவா பவத்துடா
சுற்றிடக் கருணை செய்யுளத்திடை நடமிடும் (தி)

சரணம்

அருமறை நாதா அழகிய பாதா (அ)
அடியெனின் மிடியறு கெடியமால் வரதனே
பொடிப டாக்கர்குலம் படியினில் வீழ்த்திய (தி)

(2)

சர்ப்ப சயன சர்வ காரண
தருணம் கருணையங் கடலே சரணம்
வந்தருளத்தரும பூரணனே ஹரிஹரி (தி)

தொகையரா

வீர கௌரவப் படை மாளவே கிரீடிக்கி
புவனம் காட்டிய குருவே
தேரினி லேறியே பாரதப் போரினில்
சாரத்யம் செய்த மருவே

பாட்டு.

தினகர குல ரெகுபதி ஹரிமாலே
சிறுவன் சுந்தரந் தமிழ்க்கருள் பெருமாளே
சித்தமிரங்கித் ததியே முத்திதாரும் அத்திக்கருள்
வித்தகனே சித்தசனை பெற்ற ஞான பக்த்தர்கன (தி)

40. (ராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி)
(துலங்கு செம்பொன் என்ற வர்ணமெட்டு)

பல்லவி

தகமைமா கழுகாசல வளர்பவா
தாதா செந்தா ளடியை சச்சிதானந்தக் கடவுளே
தெய்வானை பாகன் (ச)

அநுபல்லவி

அகத்துய ரகற்றிடு யுகத்தினில் மதத்துவ
மிகுத்தவா அரகரா (தாதா)

சரணம்

அண்டர் கொண்டாடும் வேலா
அன்பர்க் குள்ளாடும் சீலா
நண்பன் சுந்தரந் தமிழ்க்கே நலந்தரும் லோலா
நளினகமல மலரடியரு ளிறைவனே
பழனிமா கிரிவளர் குரு அறுமுகவனே
நற்கெதி தற்பரா மெய்ப்பொரு ளிப்பருள்
சுப்பிரமணி சிவ சத்தியின் குமாவேல (சச்)

---

41 (ராகம் சாவேரி) (தாளம் ரூபக சாப்பு)
(சித்தம் எப்படியோ என்ற வர்ணமெட்டு)

பல்லவி

இன்னும் தாமதமா ஏழைக்குன் னருள்தா (இ)

அநுபல்லவி

விண்பாவி யோங்கிடும் வித்தே வேத நாதனே
கன்மவினை யகற்றி காரும கண்ண பிரானே (இ)

சரணம

அன்னை ஜானகி ராமா ஆதரித்தருள் ஜெக
மண்ணை யளந்த நேமா
உன்னை நம்பினேன் தேடி வாராதிது தர்மமா
மண்ணிலினி வேறேது உன்னை யல்லாது யூமா (இ)

(2)

வேதனை யீன்ற மாயா விண்ணவர் போற்றும் நேயா
என்னை யாளும் சகாயா மாதவனே உபாயா
மர்மமேனோ செய்வாயா நீதவனே கெருட வாகனனே தூயா

மகுடம்

நினது பதமலர் தருவாயெனதுள மதிலே நிறைந்திடும்
பொருளே சுந்தரம் மனது அனல்ப்படும மெழுகென உருக
விடுவது தகுமோ குருபரனே. கெதிகனக் பூஷணா
தசரத னருந்தவப் புதல்வனே தாணிபுகழும தயாநிதி (இ)

42. (ராகம் மால்கோஸ்) (தாளம் ஆதி)

(கலியுக ராஜஸ்த்திரி காந்தி என்ற வர்ணமெட்டு)

பல்லவி

கலிக்கவதாரஸ்ரீ கண்ணபிரானே (க)

அநுபல்லவி

கண்ணபிரானே காரெம்பிரானே (க)
ககன மருச்சுனர்க்கு காட்டிய கோனே (க)

சரணம

நளின சிங்காரா நற்கெதி தாராய் (ந)
நன்பர்க் குள்ளாடு மசோதை குமாரா (க)
எமன் வலைவீசி யெனைத் தொடாதாசி (எ)
எழில்மிகும் கெருட வாகனப் பிரகாசி (க)
குஞ்சித பாதா குழந்தைமேல் வாதா (கு)
கோவிந்த ராம மூர்த்தியே சங்கீதா (க)
தற்பர மாயா ஜானகி நேயா (த)
சர்க்குண சுந்தர் பாலன் சகாயா (க)

43. (ராகம் இந்துஸ்த்தான் தோடி தாளம் ஆதி)

(புதுவர்ணமெட்டு)

பல்லவி

ராமா நாராயணா நரஸிம்ம ரூபவேத பாராயணா (ரா)

அநுபல்லவி

தாமதமேனோ சிறுபாலனைக் கார்க்க
தஞ்சமென்றஞ் சலித்தேன் வினைதீர்க்க
சாமளதேகாவாகா முகுந்தனே பார்த்த
சாரதி யருள்புரி யூர்த்தியைக் கார்த்த (ரா)

சரணம்

பூமா பொன்னரங்கா பொற்கமலப் பாதமலர் தந்திரங்கா (பூ)
காமனையருளிய கலிக்கவதாரா
கம்சனை வதைத்த சங்கீத கெம்பீரா
வாமனகூர்மவதாரா குபேரா
வானவர் தினந்தொழும் வாலி சம்மாரா (ரா)

[2]

நேமா நின்மலனே நித்தம்துதி பக்தெனையாள்
நம்பினேனே (நே)
சாமியின் மனத்திட மருளிது வேளை
தாசன் சுந்தரம் தமிழுனி செங்கண் மாலே
பூமியோ ரடியளந்தா யருள்க்கடலே
பூரண பகவச் சாாக்ஷரப் பொருளே (ரா)

---

44. (ராகம் பியாக்) (தாளம் ஆதி)

(பரமிர்ம வேலா என்றவர்ணமெட்டு)

பல்லவி

கூர்வடி. வேலா குமர சீலா (கூ)
கோவமேனோ பாவம் தீரும் (கூ)

அநுபல்லவி

கொஞ்சமும் கெஞ்ச மிரங்காதோ கஞ்சனையும்
சிறை செய்தவா தஞ்சம் வந்தாதரி (கூ)
குவலயமிசை புகழ் பாவிய சிவசுக சர்க்குரு
பாதேசிகனே கதிபுரி (கூ)
குறமாது தந்த தினைமாவை யுண்டு மண்மே முடித்த
பிரவே வேதாந்த (கூ)

குகனே கழுகாசலனே உமையாள் மகனே
அறுமா முகனே சரணம் (கூ)
குணவாரியே யெனையாழ் ஜெய ஹரிமால்
மருகானே யருள் (கூ)

சரணம்

கார்த்திகையின் சுதனே கனமாமலர்ப் பாதனே (க)
கரிமுகனிளைய நல்லரிஷிசை வளர்தவ முனிசுரர்
துதிபுரி கிரிவலம் சென்றவா (கூ)

தொகையரு

கொஞ்சமும் நெஞ்சமும் அஞ்சாத வம்பரை
நெஞ்சைப் பிளந்து வுன்தஞ்ச மென்றுக்கிய சிவமே
பஞ்சாச்சரப் பெருங்கருணை வள்ளலே உன் தஞ்சமென்றே
மஞ்சமிகும் இஞ்சுக பாதமே தந்தாள் யுகமே

பாட்டு

ஏறுயர் ப்ழனியப்பா ஏழை சுந்தரம் செப்பும்
இனிய செந்தமிழ்க் குகந்த சுப்பிர மணியா
கந்தனே கணியவதாரா (கூ)

45\. (ராகம் புன்னகவராளி) (தாளம் ரூபக சாப்பு)
(மஞ்சிகிகர் குந்தளமின்னே என்ற வர்ண மெட்டு)

சிந்து

செந்திலம்பதி வாளும் வேலனே சிவன் பாலனே
கனலோலனே சிந்தைதந்து காரும் சீலனே
இந்தவேளையுன் கந்தமாபதம்
தந்தருள்புரி சுந்தராபுவி
எங்குமாய் நிறைந்த கோலனே எழில் படைத்த
குற வள்ளியை இன்பமாய் மணந்த மூலனே (செ)
சந்தமயி லேறும் வாகனே சாகாமீது
தூங்கிய திரு சாமள ரூபன் மருகனே
சந்ததம் குருவந்தனம் சூரர் வெந்திடக்
கருணையுங் கொடுத்தவா

தர்பானந்த முருகனே சரவணனே
பவவினை நசிந்திடக் கண்பாரும் குகனே (செ)

தந்தி முகனுக் கிளையவா சண்முக தேவா
எந்தனைக் காவா சர்வஜீவ காருண்யா வா வா
தந்தைக்கோதி பின்னந்தார் துய
ருந்தவிர்த்தவா கந்த நாதனே

தன்னுக்குள் தானுகி நின்றவா சகலகோடி
ஊனிடை கூடி தாவி யேகமாகி நின்றவா (செ)

செந்தமிழ் சுந்தரம் சாற்றினேன் தினமறவா
தனவரதம் சேவற் கோடியோனே போற்றினேன்

சிந்தையினிற் குடிகொண்ட சர்குரு
விந்தமதை வலம்வந்த பொற்றெழில்
செங்காம் வேலேந்தும் குமானே
திகழும் கோனே புகல நானே
செப்பு முபதேசம் பானே (செ)

---

46. (ராகம் சங்காாபரணம்) (தாளம் ரூபகம்)

(உன்னைப்புகழத் தாமா என்ற வர்ணமெட்டு)

பல்லவி

மண்ணையளந்த பகவா மாயா (ம)

அநுபல்லவி

என்னை யாளய்யா ஸ்ரீ நாஹரி (ம)

சரணம்

சுவாமினந்தா கருணை தந்தாள் பூமியந்த மாகிநின்ற
காமனையருளிய முறஹரி தாமதமேனோ உனதருள்புரிய

[2]

அருமாமறை தொழுமா மலரடியேதா யிதுவேததி
திருநாரண பரிபூரண கிருபாகா யிமையோர்பதி (ம)

[3]

திருமகளுறை வரதனே ஹரிஹரி உனதிரு மலரடிகெதி
பெருவரை தனையொரு குடையென கரந்தனி
லெடுத்தவா ரெகுபதி (ம)

கனதாள் துணையே சுந்தரம் வினையே தவிரே சந்ததம்
கண்ணனே மணி வண்ணனே குரு அண்ணலே
திரு வெண்ணெ யுண்டவா (மண்)

---

47. (ராகம் செஞ்சுருட்டி) (தாளம் ஜம்பை)
(சரணகமலாலயத்தில் என்ற வர்ணமெட்டு)

திருப்புகள்

கருணைக் கடலே கடவுள்
அருமைச் சுதனே படரும்
வருமைத் துடரே யகற்ற—வருவாயே (க)

அருண கிரிக்கே மொழிந்த
திருவாத மாவின் சொந்த
மருகரா பழனிக் கந்த——வடிவேலா (க)

பரவெளி நிரை பொருளே
அரகரா பெருந் திரளே
சரகண பவா அருளைத்——தருவாயே (க)

தினகரப் பிரகாச நாதா
வனக் குறவள்ளி சமேதா
மனக்குறை தவிர்க்கும் போதா——மயிலோனே (க)

புவன மதிலே யுதித்து
மௌன குருவே யெதிர்த்த
அவுணர் சிரமே துணித்த——முருகோனே (க)

இருளறக் கண்பார் கணிந்தே
சிறுவன் சுந்தரம் பணிந்தேன்
சுருளி மலை மீதமர்ந்த——பெருமானே (க)

---

48. (ராகம் செஞ்சுருட்டி) (தாளம் ஆதி)

சுருளிமலை மீதில் மேவும் சீலா என்ற வர்ணமெட்டு)

சி ந் து

மஞ்சிசூழ் மலைச்சுருளி வாசா சிறு
மைந்தனைக் கண் பார்த்தருள் சர்வேசா இந்த
மானிலத்திலே படும் பாடேது என்னால் சொல்ல
முடியாதே காரிப்போதே (ம)

தஞ்சமென்று அஞ்சலித்தேன் வாரும் உந்தன்
குஞ்சித பதமலரைத் தாரும் முன்னம்
தாடகை சிரமறுத்தோன் மாதவனின் தன் மருகா
கந்தா உமை மைந்தா (ம)

கானில் குறவள்ளிக்காக சென்றாய் வேடர்
காண வேங்கை மரமாகி நின்றாய் உலக
காரண தமிழுக் குபதேசனே கழுகுமலை
வாசா அன்பர் நேசா (ம)

யானைமுகனுக் கிளைய சீலா அருள்
ஞானபண்டிதா கபாலி பாலா வேறு
யாருந் துணையில்லை சூரர் வீரன் தன் குலமறுத்த
தீரா மயில் வீரா (ம)

நண்பன் சுந்தரஞ் செந்தமிழ் பாடி கைலை
நாயகன் குமாரனைக் கொண்டாடி சர்வ
நாதகீத போத மந்த்ரவேத நாதனே நளின
பாதா முத்தி தாதா (ம)

---

49. (ராகம் பைரவி) (தாளம் ரூபகம்)

(ஜெய ஜெயகோ குலபாலா என்றவர்ணமெட்டு)

ப ல் ல வி

ஹரி ஹரி ஸ்ரீ பரந்தாமா (ஹ)

அநுபல்லவி

அச்சுத முரஹரி னந்தா
பக்ஷம் வைத்தருள்புரி முகுந்தா (ஹ)

சரணம்

அண்டர்கள் போற்றும் கோதண்டக் கையாமறை
கொண்டாடும் வேத பாரணனே என்குறை
மண்டல மோரடி யளந்தவா தீரே
மாமலரடியிணை தஞ்சம் சாமள ரூபனேன் வஞ்சம் (ஹ)

எத்தனையோ முறை கத்திப்புலம்பினும்
சித்தமிரங்காதேன் பகத்தர்க்குள்ளானவா
இத்தரையெனையாளும் கர்த்தனேமாதவா
எனதுளமதில் நிறைபவனே வினைமுழுதறு திருவரதனே (ஹ)

சிறுவன் சுந்தரம் செந்தமிழ் கேயுன
தருளைத் தந்திடுவாய் கெம்பீரா கன
கெருட வாகனனே ராகவா தினம்
கெஞ்சினே னஞ்சலிக் கிரங்கா
பஞ்சவர் தூதா பொன்னரங்கா (ஹ)

50. (ராகம் செஞ்சுருட்டி) (தாளம் ரூபகம்)

(இன்றைக்கிருப்பதும் பொய்யோ என்ற வர்ண மெட்டு)

சிந்து

மன்றுள் நின்றாடிய சிவமே யிளங்
கன்றை யுரித்த மாதவமே எழில்
கொன்றை தும்பையணி உறமே எந்தன்
மனமதில் நிறை பகவனேகன மனமலர்ப்பத மதனையேபுரி

மறலியை உதைத்த பரமே யோக
மௌன கிருபானந்த தீபமே (ம)

[2]

அரியும் அயன் காணப்பாதா   தில்லை
ஆடும் நடேச விநோதா
அருமாமறை போற்றும் நன்னீதா   கர்த்தா
அரகா குருபரமனே திருக்கரமதில்
மழுதனை தரித்தவா
அந்தமிரும் சிந்தை யிரங்காதா   தூய
அண்டருக்காய்   விடமுண்ட நாதா   (ம)

நாதகீத ஜோதிமலை வாசா   லோக
நாயகா முக்கண்ணனே பிரகாசா   சித்ர
நாகம்புனையேக பரநேசா   சீல
நதிமதி சிரமீதிலணி சராசர முழுவதும் நிறை கடவுளே
நமச்சிவாயமே கருணையீசா   சுந்தரம்
நற்றமிழுக்குற்ற   பரமேசா   (ம)

---

51. (ராகம் நாத நாமக்கிரியை)   (தாளம் ஆதி)

(வாரண முகங்கிளிந்து என்ற வர்ணமெட்டு)

(திருப்புகள்)

சூரபத்மனைப் பிளந்த   வீரபிர்ம்ம மாலின் சொந்த
நீரணிக்கு மாரனந்தன்——மருகோனே   (சூ)

மாரன் மைத்துனனே வந்தே   பூரணக்கிருபை தந்தாள்
காரணக் குகனே செந்தூர்——வளர்வோனே   (சூ)

பாதிமதியைத் தரித்த   ஆதவன் தனக்குரைத்த
சோதியுமை யாளளித்த——குமரேசா   (சூ)

தாதிகுறையே தவிர்த்து   நீதிதாருமே ஜெகத்துள்
கியாதி மிகவே மிகுத்த——ஜெக தீசா   (சூ)

கோலச்சிகிமீதமர்ந்த   பால சுந்தராதி க்ந்தா
காலன் வந்திடாதுகந்து——யெனையாளா   (கோ)

சிலகுண போகமந்த்ர வாலையம்பிகையின் மைந்தா
தாளைப்பணிந்தேன் சுகந்தா——துணை நீயே (சு)

மாவடி சிறந்த கர்த்தா காவடி புயத்தில் வைத்தாய்
சேவடி தனைத்துதித்தேன்——முருகோனே (மா)

தீரிடர் சுந்தரஞ் செப்பும் சீரெழில் தமிழுக்கொப்பும்
பார்நிறை பழனியப்ப——பெருமானே (சு)

(ராகம் தேசிகதோடி) (தாளம் ஆதி)
(கேளுங்கள் காந்தியின் என்ற வர்ணமெட்டு)

பல்லவி

மங்கள மங்கள மங்களமே சுப (ம)

அநுபல்லவி

மாமதி சூடிய மாசிவனுருக்கும்
மாதவானந்த கோவிந்த முராரிக்கும் (ம)

சரணம்

சங்கரியாள் பரமேஸ்பரி யாருக்கும்
சற்குரு ஜோதி விநாயகனுருக்கும் (ச)
தங்கவடி வேள்குக சரவணர்க்கும்
தாரணி யெங்கும் நிறைகலைவாணிக்கும் (ம)

[2]

முப்பத்தி முக்கோடி தேவர்கள் யாவர்க்கும்
மோன சிவயோக ஞான சிரேஷ்ட்டர்க்கும்
ஸப்த புவனம் நிறைகல்வி யாளர்க்கும்
சர்வ தெய்வ பரிபூரண வானோர்க்கும் (ம)

வாழ்த்து

அடிமுடியிலாத பரசிவமும் வாழி
அரகர வேலாயுதறுமுகமும் வாழி
நெடியகன திருமாலயனும் வாழி
நின்மலானந்த சிவ உமையும் வாழி
பரிதிமதி கணபதி சரஸ்பதியும் வாழி
பகரு சிருமதலை தமிழென்னுளும் வாழி
சுருதிமறை முனிசுர ரென்குருவும் வாழி
தொல்லுலகம் பொருளுதவி புரிந்தோர்யாவும் வாழி.

முற்றுப்பெற்றது.

55914